**தலைப்பு - 202 - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 202 - முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்திரோயகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை ஊடாக கைதவிர்ப்பு செய்யப்பட்ட 70 மர உபகரணங்கள், கணினி உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரண உறுப்படிகளின் கிரயம் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதியிலிருந்து குறைத்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட 70 மரப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரண உறுப்படிகள் மதிப்பிடப்பட்டு கைதவிர்ப்பு செய்வதற்கு முடியாமையினால் அச் சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு முடியாது போனது. அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பொருட்களை கைதவிர்ப்பு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வுடன் 2021 இன் கைதவிர்ப்பு நடவடிக்கையையும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய காலத்தினுள் குறித்த உறுப்படிகளின் கிரயத்தினை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதியிலிருந்து குறைத்து காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### (ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 891(1) பிரகாரம் பிணை பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 1647 (உ) பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 1647 (உ) பிரகாரம் தற்போது வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் பொருட்பதிவேட்டு புத்தகமொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 454(1) பிரகாரம் தற்போது பொருட் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 454(1) இன் ஏற்பாடுகளுக்கமைய பொது 44 இன் பிரகாரம் பொருட்பதிவேட்டு புத்தகமொன்று நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிர்வாக மட்டத்தில் கடமையாற்றும் உள்ளக கணக்காய்வாளர், கணக்காளர், உதவி பணிப்பாளர் போன்ற 6 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றமையினால் நிதிக் கட்டுப்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டிற்காக முறையான கட்டுப்பாடு முறைமையொன்று தயாரிப்பதற்கு முடியாதுள்ளது. எதிர்காலத்தில் குறைந்தபட்சம் இந்த பதவிகளில் சில அல்லது முழுமையான நிரப்பி முறையான நிதி மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) | 1982 இன் 33 ஆம் இலக்க வகுப் சட்டத்தின் 45 ஆம் பிரிவு | சட்டத்தின் குறித்த பிரிவின் ஊடாக முஸ்லிம் இனத்தவரின் மற்றும் இஸ்லாம் மதத்தின் முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்படக் கூடிய 5 பணிகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப் பணிகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் முஸ்லிம் இனத்தவரின் மற்றும் இஸ்லாம் மதத்தின் முன்னேற்றத்திற்காக நிறைவேற்றப்படக் கூடிய 5 பணிகள் நிறைவேற்றுவதற்கு வகுப் சபையின் கவனம் செலுத்தப்பட்டு கல்வியைப் போன்ற துறைகளின் முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு தற்போது நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் எஞ்சிய பிரிவுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அதிகாரம்<br><br>4.2.5, 4.5, 4.6 மற்றும் 6.3 உப பிரிவுகள் | இடமாற்றம் பெற்று சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 70,504 ஆன தொகை மற்றும் ஓய்வுப் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 55,448 ஆன கடன் தொகை 05 ஆண்டுகளை கடந்திருந்த போதிலும், அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 25 ஆண்டுகளாக நிலுவையிலுள்ள கடன் மீதிகளாவதுடன் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பல சந்தர்ப்பங்களின் போது முயற்சி எடுக்கப்பட்டிருந்த போதிலும் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 128 (1) (உ) | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களுக்காக போதுமான பாதுகாப்பொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அவ் வாகனங்களின் செயல்பாடு தொடர்பாக தேடியறியப்படுகின்றது. கட்டுநிதி பெறப்படாமையினால் சில சந்தர்ப்பங்களில் தாமதம் ஏற்படுகின்றது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1(3) பிரிவினால் திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 876(3) | திணைக்களத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற ஹஜ் நிதியம் பாராளுமன்றத்தின் சட்டமொன்றின் ஊடாக சட்ட ரீதியாக தாபிக்கப்பட்டிராததுடன் சுற்றறிக்கை பிரகாரம் நிதியத்தினை மூடுவதற்கு அல்லது சட்ட நிலையினை பெற்றுக் கொள்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஹஜ் நிதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் 2022 ஆம் ஆண்டு வரையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| | • 3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலம் அல்லது 25,000 கிலோமீட்டர் தூரம் செலுத்தியதன் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பழுதுபார்த்தலின் பின்னர், ஆகிய இரு விடயங்களில் முதலில் நிகழும் நிகழ்வின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் அவ்வாறான பரிசோதனையொன்று | எரிபொருள் பரிசோதனைக்கு முன்னர் மற்றும் பின்னர் முழுமையான கொள்ளளவில் எரிபொருள் நிரப்பப்பட வேண்டியதுடன் QR முறைமையின் கீழ் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமத்தினால் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாது போனது. குறித்த நிரப்பு நிலையங்களுக்கு எழுத்துமூலம் கோரப்பட்ட போதிலும் சாதகமான பதிலொன்று பெறப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அமைச்சின் ஊடாக வலுசக்தி அமைச்சிற்கு | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2019 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தெரிவிக்கப்பட்டு எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| | • 3.3 ஆம் பிரிவு | எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான வேறுபாடு காணப்படுமெனில் அதை இனங்கண்டு கொள்வதற்கு பிண்ணினைப்பு 01 ல் குறிப்பிடப்பட்டுள்ள போக்குவரத்து சேவைக் குறிப்புகள் நிரப்பப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி கருத்துரையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் எரிபொருள் பெற்று கொள்வதில் காணப்பட்ட சிரமத்தினால் இந்த சிக்கல் எழுந்துள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (vi) | 2015 யூன் 29 திகதிய 01/2015 மற்றும் 2015 யூலை 14 திகதிய 4/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் விலைகூறுகள் அழைக்கப்படாது திணைக்களத்திற்கு சொந்தமான 02 வாகனங்கள் செலின்கோ காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. | புதிய காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து விலைக்கூறுகள் அழைக்கப்பட்ட போதிலும் முன்னர் காணப்பட்ட காப்புறுதி தவணையின் கீழான காப்புறுதி பொருளாதார ரீதியில் பயனுறுதிமிக்கது என்பதனால் முன்னர் காணப்பட்ட நிறுவனத்திலேயே காப்புறுதி செய்யப்பட்டது. எவ்வாறெனினும் கணக்காயவில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் 01-02 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மற்றும் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் முறையே ரூபா 1,009,118 மற்றும் ரூபா 17,422,508 ஆன வைப்பு மீதிகள் தொடர்பாக இந்த அறிக்கை திகதி வரையிலும் நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வைப்புக்கள் திணைக்களத்தின் கட்டிடத்திற்குரிய நிறுத்தி வைத்தலாகும். கட்டிடத்தின் பணிகள் இதுவரையில் நிறைவு செய்யப்பட்டிராமையினால் அப் பணத்தொகை விடுவிப்பதற்குரிய செயற்திட்டத்தின் உசாத்துணை நிறுவனமான அரச பொறியியல் கூட்டுத்தாபனம் பரிந்துரை செய்யப்பட்டிராமையினால் அத்தொகையினை விடுவிப்பதற்கு இயலாதுள்ளது. | குறித்த வைப்புத் தொகைகள் விடுவிக்கப்படுவதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் வரும் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் நடப்பு ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முன்வைத்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறெனினும், 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டம் அங்கீகாரத்திற்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டின் செலவினம் ஏற்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொடுத்திருந்த 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 02 திகதிய 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டமூலம் சட்டமாக்கப்பட்டதன் பின்னர் அதற்கு அமைவாக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முதலாவது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வேறுபாடுகள் காணப்படாமையினால் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை வெளியிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 2022 நவம்பர் 03 ஆந் திகதியாகும். | 2021 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதம் நிலவிய போதிலும், 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை கால தாமதம் இன்றி உரிய திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அறிக்கை சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெறுகை வழிக்காட்டிக்கு முரணாக ரூபா 31,990 மற்றும் ரூபா 44,900 செலவு செய்யப்பட்டு முறையே சிறிய குளிர்சாதனப் பெட்டியொன்று, நுண்ணலை அடுப்பொன்று மற்றும் பெறுகை குழுவின் அங்கீகாரமின்றி ரூபா 259,900 இற்கு மடிக்கணினியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினா ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட்டு முறையாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையினை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய மிலாத் பரிசளிப்பு விழாவிற்கு பங்குபற்றியோருக்கு உணவு வழங்குவதற்கு ரூபா 274,500 ஆன செலவீனம் ஏற்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் டென்டர் நடைமுறையினை பின்பற்றியிருக்கவில்லை. | கொவிட் தொற்றினால் அலுவலக பணிகள் சாதாரணமாக மேற்கொள்ளாமையினால் விழாவினை நடாத்துவது நிச்சயமற்றதாய் காணப்பட்டது. எவ்வாறெனினும் பின்னர் மதிப்பிற்குரிய அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் | அரச பெறுகை வழிக்காட்டி கோவையினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அரச விழாவினை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது. விழாவானது குறுகிய காலத்தினுள் திட்டமிடப்பட்டிருந்தமையி னாலும், இதற்காக அண்ணளவாக 1000 நபர்கள் பங்கேற்றமையினாலும் திணைக்களத்திற்கு நீண்டகாலமாக சேவையினை வழங்கும் நிறுவனத்தின் ஊடாக விலைக்கூறுகள் அழைத்து மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செலவீனம் ஏற்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கின்றேன். கணக்காய்வு ஐயவினா ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு முறையாக பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | ஒரே நாளில் ஒரே நிறுவனமொன்றில் ரூபா 450,000 மற்றும் ரூபா 310,000 மற்றும் ரூபா 310,000 வீதம் 03 வவுசர்கள் ஊடாக மொத்தம் ரூபா 1,071,100 பெறுமதியான மர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவு, திணைக்கள டென்டர் அழைத்தல் ஊடான கொள்வனவு எல்லையான ரூபா 500,000 இனை விஞ்சி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரச நிறுவனமான அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தில் இந்த கொள்வனவு இடம்பெற்றுள்ளது. கணக்காய்வு ஐயவினா ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டு முறையாக பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | அரச பெறுகை வழிக்காட்டி கோவையினை பின்பற்றுதல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த புகையிரத திணைக்களத்திற்குரிய காணியினை திணைக்களத்தின் பெயருக்கு சுவீகரித்துக் கொள்வதற்கு இந்த அறிக்கை திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் ஊடாக இந்த காணியின் சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுவீகரிப்பு நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்த போதிலும் விளைவற்று காணப்படுகின்ற திணைக்களத்தின் கட்டிடத்திற்கான மத்திய வளிப்பதனாக்கி தொடர்பில் இந்த அறிக்கை திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | பழைமையான வளிப்பதனாக்கி அமைப்பினை அகற்றி புதிய வளிப்பதனாக்கி அமைப்பு பொருத்துவதற்கு அல்லது அதை புதிதாக்குவதற்கு பாரிய கிரயமொன்று ஏற்பதற்கு நேரிடுகின்றது. இது தொடர்பில் அமைச்சுடன் இணைந்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பேரீச்சை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நோன்பு பண்டினை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அந் நடவடிக்கைகள் உரிய காலத்துடன் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அதன் காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் முறையற்றதாக டென்டர் நடைமுறைக்கு முரணாக வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் சில சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் சில உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கி அப் பணி வெளிப்படைத்தன்மை அற்றதாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பேரீச்சை போக்குவரத்திற்கு சதோச நிறுவனத்தின் வாகனம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த போதிலும் அவ் வாகனங்கள் பெறப்படாமையின் காரணத்தினால் சில தனியார் டிரான்ஸ்போட்டாளர்களிடமிருந்து விலைக்கூறுகள் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் எரிபொருள் நெருக்கடியின் காரணத்தினால் பேரீச்சை போக்குவரத்து செய்வதற்கு முடியாமை பின்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. எரிபொருள் தட்டுப்பாட்டினாலும் நோன்பு மாதத்தினை கடக்கும் முன்னர் பேரீச்சைந நாட்டின் அனைத்து பள்ளிகளுக்கும் போக்குவரத்து செய்து நிறைவு செய்யப்பட்ட வேண்டியமையினாலும் பெறுகை நடவடிக்கைகள் உரிய வண்ணம் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துக் கொள்கின்றேன். | பேரிச்சைப் பழம் விநியோகித்தல் தொடர்பாக முறையாக திட்டமிடப்பட்டு சட்டத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் திணைக்களத்தின் 06 உத்தியோகத்தர்களுக்கு திணைக்களத்தின் சுற்றாடலில் தங்குமிட வசதி வழங்கியிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படும் பொருளாதார கட்டணம், தாபன விதிக் கோவையின் XIX ஆம் அதிகாரத்தின் 5.2.3 மற்றும் 5.6 பிரிவின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளாது தீர்மாணிக்கப்பட்டிருந்தது. | தங்குமிட வசதி வழங்குவதற்கு விலைமதிப்பு திணைக்களத்தின் முறையான மதிப்பீட்டின் பின்னர் கட்டணம் அறவிடப்படும். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(i)(ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பணிகள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு பயனுறுதிமிக்க முறைமையொன்று காணப்படுகின்றமை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுறுதிப்படுத்தல் வேண்டும். மேலும், நிதி பிரமாணம் 133 பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதி பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள தமது கடமை மற்றும் பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்கு தமது திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்படல் வேண்டும். எவ்வாறெனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதி தொடக்கம் அந்த பதவி வெற்றிடமாக காணப்படுகின்றமையினால் உள்ளக கணக்காய்வு பணிகள் உரிய வண்ணம் செயற்படுத்துவதற்கு மற்றும் பயனுறுதிமிக்க முறைமையொன்று தாபிப்பதற்கு முடியாதுள்ளது. தற்போது உள்ளக கணக்காய்வாளர், கணக்காளர் பதவிகளில் வெற்றிடங்கள் நிரப்ப முடியாமையை பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. எவ்வாறெனினும் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரின் உதவியுடன் முறையான முறைமையொன்றினை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். தற்போது இரு உத்தியோகத்தர்களை கொண்டு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தின் காரணத்தினால் மேற்பார்வை நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணக்கூடியதாக இருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனைத்து நிறுவனத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதி தொடக்கம் இது வரையில் இந்த பதவி வெற்றிடமாக காணப்படுகின்றமையினால் உள்ளக கணக்காய்வு பணிகள், கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழு கூட்டம் நடாத்துவதற்கு முடியாதுள்ளது. எவ்வாறெனினும் அமைச்சிள் உள்ளக கணக்காய்வாளரின் உதவியுடன் முறையான முறைமையொன்று தயாரிப்பதற்கு மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 123 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளவாரான பதவியணி 109 ஆக காணப்பட்டது. இதில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 7 உத்தியோகத்தர்களின் மிகையும் ஏனைய பதவிகள் தொடர்பில் 21 வெற்றிடங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2021 இல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைக்கும் போது வெற்றிடங்களை கருத்திற் கொள்ளாது இணைக்கப்பட்டுள்ளமையினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் மிகையொன்று காணப்படுகின்றது. எவ்வாறெனினும் தற்போது பொது நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022 இன் பிரகாரம் சம்பளமற்ற உள்நாட்டு/வெளிநாட்டு விடுமுறைகளை பெற்றுக் கொண்டு 09 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சென்றுள்ளனர். வெற்றிடங்களை நிரப்பி தருமாறு பல சந்தர்ப்பங்களில் அமைச்சின் செயலாளரின் ஊடாக பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது நிரப்ப முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 5 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் பணி புரிந்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் வேறு சேவை நிலையங்களில் பணி புரிவதற்கு இடமளிப்பதற்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்க வேண்டியதுடன், திணைக்களத்தினுள் 05 ஆண்டுகளை மிகைத்த 45 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையில் 10 உத்தியோகத்தர்கள் 15 ஆண்டுகளை மிகைத்து திணைக்களத்தில் பணிபுரிந்திருந்தனர். | 05 ஆண்டுகளை மிகைத்த சேவை காலத்தினை உடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், ஓட்டுனர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் வருடாந்தம் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த போதிலும், இந்த திணைக்களம் விருப்பத்திற்குரிய சேவை நிலையம் அற்றதென்பதனால் பதிலி பெற்றுக் கொடுப்பதற்குள்ள சிக்கலினால் பொது நிர்வாக அமைச்சினால் இடமாற்றம் செய்யாத போதிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினை உடைய உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டிலும் இடமாற்ற ஆவணத்திற்கு உள்ளடக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |